RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21430

# பட்டினப்பாலையில் காணலாகும் பொருளாதாரச் சிந்தனைகள்

**க. பன்னீர்செல்வம்**

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவில் கல்லூரி, ஈரோடு-638009, இந்தியா

# Economic thoughts found in Pattinapalai

**K. Panneerselvam** [a, *]

[a] Department of Tamil, Erode Arts and Science College, Erode-638009, India.

* Corresponding Author: ka.panneer73@gmail.com

Received: 30-07-2021
Revised: 17-10-2021
Accepted: 23-10-2021
Published: 30-10-2021

Check for updates

## ABSTRACT

If the people living in a country live happily and contentedly, it means that there is good economic prosperity there. If the economy is prosperous, then they should have had the best thinking and planning in earning and spending the economy. As far as the Tamils of the Sangam age are concerned, the economic ideas have been explained more often by living and showing them than by speaking alone. Economic ideas are embedded in the way they lived. Therefore, if we study the way of life of the Tamils of the Sangam age, we will find out the way of life in which they lived with economic thought and the economic thought which was the basis for it. Thus, the purpose of this article is to bring out the ideas on the economy based on the way of life of the Tamils found in the Pattinapalai book, which is included in the Sangam literature, Pathupaattu.

**Keywords:** Pathupaattu, Pattinapalai, Economic ideas, Sangam

## முன்னுரை

ஒரு நாட்டில் வாழும் மக்கள் மகிழ்ச்சியுடனும், மனநிறைவுடனும் வாழ்கிறார்கள் என்றால் அங்கு பொருளாதார வளம் சிறப்பாக இருக்கிறது என்பதுதான் பொருளாகும். பொருளாதாரம் வளமாக இருக்கிறது என்றால் அவர்கள் பொருளாதாரத்தை ஈட்டுவதிலும், செலவு செய்வதிலும் சிறந்த சிந்தனைவளமும், திட்டமிடலும் கொண்டவர்களாக இருந்திருக்கவேண்டும். சங்ககாலத் தமிழர்களைப் பொருத்தவரை பொருளாதாரச் சிந்தனைகளைத் தனியாக எடுத்துக் கூறியதைக்காட்டிலும் பெரும்பாலும் வாழ்ந்து காட்டியதன்மூலமே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையில் பொருளாதாரச் சிந்தனைகள் பொதிந்துகிடக்கின்றன. எனவே, சங்ககாலத் தமிழர்களின் வாழ்க்கை முறையை ஆய்வு செய்தால் அவர்கள் பொருளாதாரச் சிந்தனையோடு வாழ்ந்த வாழ்க்கை முறையையும், அதற்கு அடிப்படையாகப் பொருளாதாரச் சிந்தனை இருந்ததையும் அறியமுடியும். அவ்வகையில் சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டு எனும் தொகைநூலுள் அடங்கும் பட்டினப்பாலை நூலில் காணலாகும் தமிழர்களின் வாழ்க்கை முறையைக்கொண்டு பொருளாதாரம் குறித்த சிந்தனைகளை வெளிக்கொண்டு வருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பொருள்வயின் பிரிவு

தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்து செல்கிறான் என்றால் அதற்கு நான்கு காரணங்கள் உண்டு எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. கற்றற்குச் செல்லுதல், பகை காரணமாகப் பிரிதல், தூது போதல் என்பதோடு பொருள்வயின் பிரிவும் அடங்கும். இதனை,

'பொருள்வயிற் பிரிதலும் அவர்வயின் உரித்தே' (Thamizhannal, 2010)

என்பதன் வாயிலாக அறியலாம். ஒரு தலைவனும் தலைவியும் இனைந்து குடும்பப் பொறுப்பை ஏற்கும்போது இல்லறம் நல்லறமாக நடைபெற பொருளாதாரம் மிகமுக்கியம் என்பதை இந்தப் பொருள்வயின் பிரிவு உணர்த்துகிறது.

பட்டினப்பாலை எனும் நூலின் கதைக்கருவானது தலைவன் பொருள் தேடுவதற்காகத் தலைவியைப் பிரிந்து செல்லக் கருதுகிறான். ஆனால் தலைவியின் அன்பும், அவளைப் பிரிவதால் ஏற்படும் துன்பமும் வாட்டுவதால் பிரிவைத் தள்ளிப் போடுகிறான். பிரிவைத் தள்ளிப் போடுகிறானேயொழிய கைவிடவில்லை என்பதே அங்கு பொருளாதாரம் முக்கியப் பங்கு வகித்திருப்பதை அறியமுடியும். சங்ககாலம்தொட்டே பொருளாதாரத்தின் பயனை நன்கு உணர்ந்தவர்களாகத் தமிழர்கள் இருந்துள்ளதையே இச்செய்தி பறைசாற்றுவதாக இருக்கிறது.

## பண்டமாற்று முறை

தங்களுக்குத் தேவையான பொருளைப் பெறுவதற்குத் தங்களிடம் மிகுதியாய் உள்ள பொருளைக் கொடுத்துப் பெறுவது பண்டமாற்று முறையாகும். இம்முறையில்தான் சங்ககாலத் தமிழர்கள் வாணிபம் செய்துள்ளனர். உள்நாட்டிற்குள்ளேயே வாணிபம் செய்தபோதும், வெளிநாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்தபோதும், அல்லது வெளிநாட்டவர் தமிழகத்திற்கு வந்து வாணிபம் நடத்தியபோதும் பண்டமாற்று முறையில்தான் வாணிபம் நடைபெற்றது.

காவிரிபூம்பட்டிணம் சோழ நாட்டின் துறைமுகமாக விளங்கியது. எனவே, இங்கு பல்வேறு நாட்டினரும் தங்களது பல்வேறு பொருட்களைக் கொண்டுவந்து வாணிபம் செய்துள்ளதையும் அப்பொருட்களை வாங்குமளவிற்குப் பொருளாதாரத்தில் அம்மக்கள் சிறப்புற்றிருந்தனர் என்பதையும் பட்டினப்பாலை வழியாக அறியமுடிகிறது.

மேல்நாடுகளிலிருந்து கடல் மார்க்கமாகக் குதிரைகளும் தரைமார்க்கமாக சேர நாட்டிலிருந்து மிளகு, சந்தனம், அகில் போன்றனவும், மேருமலையிலிருந்து மாணிக்கமணிகளும், பொன்னும் வந்தன. கொற்கைத் துறைமுகத்திலிருந்து முத்துக்களும், கிழக்குக் கடற்கரையிலிருந்து பவளங்களும் வந்தன. கங்கையாற்றில் விளைந்த பல்வேறு உணவுப் பொருள்களும், ஈழத்திலிருந்து(இலங்கை) பொருட்களும், காழகம் எனப்படும் கடாரம் ஆகிய தற்போது மலேசியா என்றழைக்கப்படும் நாட்டிலிருந்து கிடைத்தற்கரிய பொருள்களும் காவிரிப்பூம்பட்டிணத்திற்கு வந்திறங்கின என்பதை,

'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்

காலின் வந்த கருங்கறி மூடையும்

வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்

குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்

தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்

கங்கை வாரியும் காவிரிப் பயனும்

ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்

அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி

வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகின்'

என்ற பாடலடிகள் வாயிலாக அறியமுடிகிறது (Subramanian, 2003).

இன்றைய வணிகர் பலர் பொருளாதாரத்தைப் பெருமளவில் சேர்க்கவேண்டும் என்ற ஆர்வ உந்துதலால் இலாப நோக்கம் ஒன்றையே முதன்மையாகக்கொண்டு தரம், நேர்மை போன்றவற்றில் குறையுடையவர்களாக இருப்பதைக் காணமுடிகிறது. சங்ககால மக்கள் அளவுக்கு அதிகமாக ஆசைப்படாதவர்களாகவும், நேர்மையைக் கடைபிடிக்கக்கூடியவர் களாகவும், விற்பனை செய்த

பொருளை அளவு குறையாமல், அளவுக்கும் மிகுதியாகவே கொடுத்ததையும், தேவைக்கு மிகுதியாகப் பெறாதவர்களாகவும் இருந்த பரந்த உள்ளத்தைக் காணமுடிகிறது. மேலும், தமக்குக் கிடைக்கக்கூடிய இலாபத்தின் அளவை கூறியே விற்றனர். இதனை,

'நெடுநுகத்துப் பகல்போல

நடுவுநின்ற நல்நெஞ்சினோர்

வடுஅஞ்சி வாய்மொழிந்து

தமவும் பிறவும் ஒப்ப நாடிக்

கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது

பல்பண்டம் பகர்ந்து வீசும்'

என்ற பாடலடிகள் வாயிலாக அறியலாம் (Subramanian, 2003). வாணிபத்தில் தேவைக்கு அதிகமாகப் பெறுதல் கூடாது, கொடுப்பதில் குறைத்துக் கொடுப்பதற்குப் பதிலாக மிகுதியாகக் கொடுப்பது, இலாபத்தின் அளவை நேர்மையாகக் கூறிவிடுவது போன்ற உணர்வுப்பூர்வமான நியாயமான சிந்தனைகளைக் கையாண்டு தங்களது பொருளாதாரத்தைப் பொருக்கிக் கொண்டனர். வாணிபத்தில் நேர்மையான முறையில் பொருளாதாரத்தைப் பெருக்கினால்தான் சேர்த்த பொருள் தங்களிடமே தங்கும் என்ற நம்பிகையும் தமிழர்களின் பொருளாதாரம் குறித்த சிந்தனையின் வெளிப்பாடாகும்.

## பண்டசாலை

பண்டங்கள் என்றால் பொருட்கள் எனப் பொருள்படும். இப்பொருள்களை விற்பனை செய்யும் இடத்திற்குப் பெயர் பண்டசாலை எனப்படும். ஊர்ஊராக, நாடுநாடாகச் சென்று தங்களது பொருள்களை விற்பனை செய்தனர் அதோடு ஓரிடத்தில் நிலையாகக் கடை அமைத்தும் விற்பனை செய்த முறையையும் பட்டினப்பாலை குறிப்பிடும் பண்டசாலை வாயிலாக அறியமுடிகிறது. கடல் வழியாக வந்த பொருள்களை நிலத்தில் அமைக்கப்பட்ட பண்டசாலை மூலமாகவும், நிலம் வழியாக வந்த பொருட்களை மரக்கலங்களில் பரப்பியும் விற்பனை செய்தனர். இதனை,

'நீரினின்றும் நிலத்துஏற்றவும்

நிலத்தினின்று நீர்பரப்பவும்

அளந்தறியாப் பலபண்டம்'

என்ற பாடலடிகள் வாயிலாக அறியலாம் (Subramanian, 2003).

## சுங்கச்சாவடி

நகரத்தைவிட்டு வெளியே செல்லும் பொருட்கள், உள்ளே வரும் பொருள்கள் ஆகியவற்றைக் கண்காணிக்கச் சுங்கச்சாவடி அமைத்து அதற்குரிய காவலர்களை அமர்த்தி செயல்பட்டதையும், பொருட்களுக்கு புலி இலட்சினை கொண்டு முத்திரையிடும் வழக்கமிருந்ததையும், அப்பொருள்களுக்கு சுங்கம் விதிக்கப்பட்டதையும்

'அருங்கடிப் பெருங்காப்பின்

வலியுடை வல்அணங்கினோன்

புலிபொறித்துப் புறம்போக்கி

மதிநிறைந்த மலிபண்டம்'

என்ற பாடலடிகள் வெளிப்படுத்துகிறது (Subramanian, 2003).

## கொடிகள்

ஒவ்வொரு கடைக்கும் ஒவ்வொரு பெயர் வைத்துக்கொள்ளும் முறை இன்றுள்ளது. சங்ககாலத்திலோ ஒவ்வொரு கடைக்கும் ஒவ்வொரு வண்ணத்தில் அமைந்த கொடிகள் கட்டப்பட்டிருந்தன எனப் பட்டினப்பாலை பாடல் குறிப்பிடுகிறது. வண்ணவிளக்குகள் எனப்படும் அலங்கார விளக்குகளை அமைத்து வாடிக்கையாளர்களைக் கவரும் இன்றைய நடைமுறைக்கு முன்னோடியாகச் சங்ககாலத்தில் கடைகளுக்கு வண்ணக்கொடிகள் கட்டும் வழக்கமிருந்ததை அறியமுடிகிறது. இதனை,

'நறவுநொடைக் கொடியோடு

பிறபிறவும் நனிவிரைஇப்

பல்வேறு உருவின் பதாகை நீழல்'

என்ற பாடலடிகளால் அறியலாம் (Subramanian, 2003).

## செல்வ வளம்

விலையுயர்ந்த பொருட்களை ஒரு பொருட்டாகக் கருதாமல் வீரம், கருனை, கொடை, காதல் போன்ற விழுமியங்களுக்கே தமிழர்கள் முதன்மை இடம் கொடுத்திருந்ததை அறிய முடிகிறது. விளையுயர்ந்த பொருட்களை வாங்குமளவு பொருளாதாரத்தில் மிதமிஞ்சியவர்களாக இருந்தாலும் அவற்றை தாங்களே துய்க்க வேண்டும் என்று கருதாமல் இல்லாததோருக்கு அள்ளி அள்ளிக் கொடுத்து மகிழ்ந்தனர். அல்லது தேவையான செலவுகளைக் கஞ்சத்தனம் செய்யாமல் செலவிட்டு மகிழ்ந்தனர். தாங்கள் வாழும் இல்லங்களைப் பெரியதாகவும், கலை நுட்பங்களுடனும், கட்டி மகிழ்ந்தனர். விதவிதமான ஆடைகளை வாங்கி அணிந்து மகிழ்ந்தனர். அய்யன் திருவள்ளுவரும்,

'ஆற்றின் அளவறிந்(து) ஈக அதுபொருள்

போற்றி வழங்கும் நெறி' (Puliyur Kesigan, 2009)

என்ற குறளில், பொருள் வரும் வழியின் அளவை நன்றாகத் தெரிந்துகொண்டு, செய்யத்தக்க முறையால் பிறருக்குப் பொருளுதவி புரியவேண்டும். அத்தகைய கொடையே பொருளைப் பேணிக் காத்து வழங்கும் வகையாகும் என்று கூறுவதற்கு ஏற்ப தமிழர்கள் வாழ்ந்தனர் என்பதை அறியமுடிகிறது. தமிழர்களின் பொருளாதாரம் குறித்த சிந்தனையில் இதுவும் ஒரு கூறாக இருந்துள்ளது.

வணிகர்கள் வாழும் தெருக்களில் அழகிய மாடங்கள் மேகங்களை முட்டும் அளவிற்கு உயர்ந்ததாகவும், சிறிய, பெரிய வாயில்களையுடைதாகவும், சுற்றுத் திண்ணைகளையும், பல படிகள் கொண்ட ஏணிகளையும் உடையதாக விளங்கின என்பதை,

'குறுந்தொடை நெடும்படிக்கால்

கொடுந்திண்ணைப் பல்தகைப்பின்

புழைவாயில் போகுஇடைகழி

மழைதோயும் உயர்மாடத்து'

என்ற பாடலடிகளால் அறியலாம் (Subramanian, 2003).

முற்றத்தில் தாணியங்கள் உலர்த்திக் கொண்டிருந்த வேளையில் அதனைத் தின்ன வந்த கோழிகளைத் தம் காதில் அணிந்திருந்த காதணிகளைக் கழற்றி எறிந்து விரட்டினர். அவ்வாறு எறிந்த காதணிகள் சிறுகற்களைப்போலக் கீழே சிதறிக் கிடந்தன என்பதை,

'நேரிழை மகளிர் உணங்குஉணாக் கவரும்

கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை

பொற்கால் புதல்வர் புரவிஇன்று உருட்டும்

முக்கால் சிறுதேர் முன்வழி விலக்கும்'

என்ற பாடலடிகள் கூறுகிறது (Subramanian, 2003). மேலும். புலி இலட்சினை பொறிக்கப்பபடடு பொருத்தப்பட்ட வலிமையான கதவுகளையுடைய மதிலுக்குள் செல்வம் நிரந்தரமாக தங்கியுள்ளளது. வருகின்றவர்களுக்கெல்லாம் உணவு வழங்கியதால் அறமானது நிலைபெற்று விளங்கியது என்பதை,

புலிபொறிப் போர்க்கதவின்

திருத்துஞ்சும் திண்காப்பின்

புகழ்நிலைஇய மொழிவளர

அறம்நிலைஇய அகன்அட்டில்

சோறுவாக்கிய கொழுங்கஞ்சி'

என்பதால் அறியலாம் (Subramanian, 2003).

## முடிவுரை

தமிழர்கள் பொருளாதாரத்தின் பயனை நன்கு உணர்ந்தவர்கள் என்பதை பொருன்வயின் பிரிவு உணர்த்துகிறது. பொருள் சேர்க்கும் வழிமுறைகளையும், அவற்றை வியாபாரம் போன்ற வழிகளில் பெருக்கும் வழிமுறைகளையும், அப்பொருள்களைப் பயனுடைய வழிகளில் செலவு செய்யும் முறைகளையும் அறிந்திருந்தனர் என்பதே தமிழர்கள் பொருளாதாரச் சிந்தனையில் சிறந்து விளங்கினர் என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. நேர்மையான வழியில் பொருளீட்டினால்தான் அப்பொருள் தீங்கினைத் தராமல் நன்மையைத் தரும் எனவும், சேர்த்த பொருளை அறவழியில் செலவழிக்க வேண்டும் எனவும் உயர்ந்த சிந்தனைகளை உடையவர்களாக இருந்ததையும் ஆய்வின் வழி அறியமுடிகிறது.

## References

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.
Subramanian, S.V. (2003) Sanga Ilakkiyam Pathupattu - Moolamum Uraiyum, Koviloor Madalayam, Koviloor, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License